நல்லூர் இளை நூலகம்
மாநகர
யாழ்

Registered as a News Paper | பக்கங்கள்: 04 | விலை ரூபா: 5-00


# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஆவணி 25 | (10 - 09 - 1992) | வியாழக்கிழமை | ஓசை 205

## ஆவேசம் கொண்ட மக்கள் செயலகம் மீது தாக்கு

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களின் அரசுக்கெதிரான ஆவேச உணர்ச்சி அலையின் உக்கிரம் காரணமாக யாழ். செயலகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அரசின் நிவாரணவெட்டைக் கண்டித்து நடாத்தப்பட்ட கண்டனப் பேரணியின் இறுதியில் யாழ் செயலகத்தை முற்றுகையிட்டு நின்ற மக்கள் கூட்டம் இததாக்குதலை நடாததியது. நிவாரணம வெட்டப்பட்டதைக் கண்டிக்கும் சிறிலங்கா ஜனாதிபதிககான கண்டன மகஜரை கையளிக்கும் வைபவம் நடைபெற்றுக் கொணடிருக்கும் சமயம் அரசுக்கெதிரான உணர்ச்சியால் பொங்கி எழுந்த மக்கள் கூட்டம் செயலகத்தின் மதிலையும் பாய்ந்து செயலக வளாகத்திற்குள் புகுந்தது இவ்வாறு புகுந்தவர்கள் (4 ஆம் பக்கம் பார்க்க)



யாழ். நகரில் நேற்று நடைபெற்ற கண்டனப் பேரணியில் கலந்து கொண்ட பல்லாயிரக்கணக்கான மக்களில் ஒரு பகுதியினரை முதலாவது படத்திலும், தமிழீழ வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சூ. சிறில் யாழ். மாவட்ட பிரதி ஆணையாளர் து. வைத்திலிங்கத்திடம் ஜனாதிபதி பிரேமதாசாவிற்கான மகஜரைக் கையளிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# யாழ். நகரில் மக்கள் சமுத்திரம்; அரசை எதிர்த்து எழுச்சிப் பேரணி

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணத்தை அரசு அரைவாசியாகக் குறைத்ததைக் கண்டித்து நேற்று வரலாறு காணாத மாபெரும் கண்டனப் பேரணியும் மறியல் போராட்டமும் நடைபெற்றது.

குடாநாடு தழுவிய வகையில் மிகவும் உணர்வு பூர்வமாக நடைபெற்ற இவ் ஆர்ப்பாட்டப் பேரணியிலும் மறியல்ப் போராட்டத்திலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

பெண்கள், குழந்தைகள், பாடசாலை மாணவர்கள், அரச, தனியார்துறை ஊழியர்கள் உடபட அனைததுத்தரப்பினரும் ஒருங்கிணைந்து இக் கண்டனப் பேரணியை நடாத்தினர்

குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் இக்கண்டனப் பேரணிக்கு அலையலையாக மக்கள் திரண்டு வந்திருந்தனர் தீவகத்தில் இருந்து (4 ஆம் பக்கம் பார்க்க)

## இரு வேங்கைகள் வீரச்சாவு

திருகோணமலை மாவட்டதல் குரங்குபாஞ்சான் பகுதியில் நேற்று சிறிலங்கா இராணுவத்தினருடன் நடை [4 ஆம் பக்கம் பார்க்க]

வீரவேங்கை வளவர்கோன்

கப்டன் நந்தன்

# மணலாற்றில் துணிகர அதிரடி;

## யாழ். மாவட்டத்தில் பூரண கதவடைப்பு

யாழ். மாவட்டத்தில் உள்ள அரச, தனியார்துறை அலுவலகங்கள் அனைத்தும் நேற்று இயங்காமல் ஸ்தம்பிதமடைந்தன யாழ். நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது.

உணவு நிவாரணத்தை அரைவாசியாகக் குறைக்கும் அரசின் திட்டத்தைக் கண்டித்து நேற்றுநடைபெற்றகண்டனப்பேரணியையும், மறியல்ப் போராட்டத்தையும் அடுத்து மேற்படி நிலை உருவாகியது.

யாழ். அரச செயலகம் உட்பட அனைத்து அலுவலகங்களும் மூடப்பட்டிருந்தன. இதனால் யாழ் நகரம் மற்றும் அதனை அண்டிய வீதிகளிலும் சன நடமாட்டம் குறைவாகக் காணப்பட்டது. (க,பா)

## அரசாங்கத்தின் செயல் படு துரோகத்தனமானது

### பிரதி ஆணையாளர் வைத்திலிங்கம்

(யாழ்ப்பாணம்)

''நிவாரணத்தைஅரைவாசியாக வெட்டிய அரசின் செயல் படு துரோகத்தனமானது'' இவ்வாறு யாழ். மாவட்ட பிரதி ஆணையாளர் திரு.து. வைத்திலிங்கம் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற கண்டனப் பேரணி மற்றும் மறியல்ப் போராட்டம் ஆகியவற்றின் முடிவில் திரு து. வைத்திலிங்கம் அவர்களிடம் ஜனாதிபதிக்கான கண்டன மகஜர் கையளிக்கப்பட்டது

கண்டன மகஜரைப் பெற்றுக்கொண்ட அவர் கூடியிருந்த மக்கள் மத்தியில் உரை நிகழ்த்தும்போது மேற்கண்டவாறு கூறினார்.அவர்தொடர் [4 ஆம் பக்கம் பார்க்க]

## "ஏழைகள் அழுதால் எரிமலை வெடிக்கும்"

(யாழ்ப்பாணம்)

''ஏழைகள் அழுதால் எரிமலை வெடிக்கும்'', இது நேற்று யாழ். நகரில் அரசின் நிவாரண வெட்டை எதிர்த்து நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்ட மக்கள் எழுப்பிய கோசங்களில் ஒன்று. இப்பேரணியில் எழுப்பப்பட்ட மற்றும் சில கோசங்கள் வருமாறு:

'வறுமையில் வாடும் மக்களின் வயிற்றில் அடிக்காதே, அடிக்காதே'', ''அரைவாசி நிவாரணம் அரசின் அலங்கோலக்காட்சி'', ''எமது உயிரென்ன அறுவடைப் பயிரா'', ''நிவாரண வெட்டு பேரினவாத அரசின் வேட்டு'', ''இடம் பெயரவைத்து விட்டு நிவாரணத்தில் வெட்டா'', ''நிவாரண வெட்டா தமிழ் மக்கள் அழிப்பா'', ''அரச இயந்திரமே ஊசலாடாதே'', ''குண்டினால் செய்ய முடியாததை நிவாரண வெட்டினால் செய்ய முடியுமா'', ''நிவாரண வெட்டு தமிழர் தலைகளை வெட்டுமா'', ''எரி [4 ஆம் பக்கம் பார்க்க]

# அரசை எதிர்த்து எழுச்சிப் பேரணி

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணத்தை அரசு அரைவாசியாகக் குறைத்ததைக் கண்டித்து நேற்று வரலாறு காணாத மாபெரும் கண்டனப் பேரணியும் மறியல் போராட்டமும் நடைபெற்றது.

குடாநாடு தழுவிய வகையில் மிகவும் உணர்வு பூர்வமாக நடைபெற்ற இவ் ஆர்ப்பாட்டப் பேரணியிலும் மறியல் போராட்டத்திலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

பெண்கள், குழந்தைகள், பாடசாலை மாணவர்கள், அரச, தனியார் துறை ஊழியர்கள் உட்பட அனைத்துத் தரப்பினரும் ஒருங்கிணைந்து இக் கண்டனப் பேரணியை நடாத்தினர்.

குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் இக்கண்டனப் பேரணிக்கு அலையலையாக மக்கள் திரண்டு வந்திருந்தனர் தீவகத்தில் இருந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## எரிமலை வெடிக்கும்"

(யாழ்ப்பாணம்)

"ஏழைகள் அழுதால் எரிமலை வெடிக்கும்", இது நேற்று யாழ். நகரில் அரசின் நிவாரண வெட்டை எதிர்த்து நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்ட மக்கள் எழுப்பிய கோசங்களில் ஒன்று. இப்பேரணியில் எழுப்பப்பட்ட மற்றும் சில கோசங்கள் வருமாறு:

'வறுமையில் வாடும் மக்களின் வயிற்றில் அடிக்காதே, அடிக்காதே", "அரைவாசி நிவாரணம் அரசின் அலங்கோலக்காட்சி", "எமது உயிரென்ன அறுவடைப் பயிரா", "நிவாரண வெட்டு பேரினவாத அரசின் வேட்டு", "இடம் பெயரவைத்து விட்டு நிவாரணத்தில் வெட்டா", "நிவாரண வெட்டா தமிழ் மக்கள் அழிப்பா", "அரச இயந்திரமே ஊசலாடாதே", "குண்டினால் செய்ய முடியாததை நிவாரண வெட்டினால் செய்ய முடியுமா", "நிவாரண வெட்டு தமிழர் தலைகளை வெட்டுமா", "எரி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இரு வேங்கைகள் வீரச்சாவு

திருகோணமலை மாவட்டத்தல் குரங்குபாஞ்சான் பகுதியில் நேற்று சிறிலங்கா இராணுவத்தினருடன் நடை

[4 ஆம் பக்கம் பார்க்க]

வீரவேங்கை வளவர்கோன்



கப்டன் நந்தன்



# மணலாற்றில் துணிகர அதிரடி; 20 ராணுவம் பலி; பலர் காயம்

(நமது நிருபர்)

மணலாற்றுப் பிரதேசத்தில் விடுதலைப்புலிகள் துணிகரத் தாக்குதல்ஒன்றை நடத்தினர். வெற்றிகரமான இத்தாக்குதலின்போது இருபதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் பலர் படுகாயமடைந்தனர் பெருமளவு ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டது ஒரு போராளி வீரச் சாவடைந்தார்.

நேற்றுக் காலை, 6.40 மணியளவில், மணலாற்றிலுள்ள கும்பகர்ணமலை இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினரே புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகினர் இம் முகாமிலிருந்து உழவு இயந்திரத்தில் வெளியேறிய இராணுவத்தினர் முகாமிலிருந்து சுமார் 300 யார் தொலைவில் வைத்து வழிமடக்கித் தாக்கப்பட்டனர்.

இதேவேளை இத்தாக்குதல் இடம் பெற்ற பகுதியிலிருந்து சுமார் 200 யார் தொலைவிலிருந்த இராணுவ காவலரண்கள் மீதும் மற்றுமொரு அணியினர் தாக்குதலைத் தொடுத்தனர்

சுமார் 20 நிமிடங்கள் வரையில் நீடித்த இத்தாக்குதலில் 20க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். இவர்களிடம் இருந்து பெருமளவு நவீன ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றினர்.

## அள்ளப்பட்ட ஆயுதங்கள்

மணலாற்றுப் பிரதேசத்தில் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரமான காக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| ★ ஏ.கே எல் எம். ஜி. துப்பாக்கிகள் | — 02 |
| ★ 203 ரக பிஸ்ரல் | — 02 |
| ★ 60 எம் எம் மோட்டார் (பேஸ்பிளேற்றுடன்) | — 02 |
| ★ ரி- 56- 2 ரகத் துப்பாக்கி | — 11 |
| ★ ரி- 56- 1 ரகத் துப்பாக்கி | — 02 |
| ★ ரி- 56- பட்மொடல் துப்பாக்கி | — 01 |
| ★ ரி- 56- புதியரகத் துப்பாக்கி | — 03 |
| ★ ரி- 81- 1 ரகத் துப்பாக்கி | — 04 |
| ★ எஸ். எல் ஆர் ரகத் துப்பாக்கி | — 03 |
| ★ 6 எம். எம். ஸ்கோப் | — 02 |
| ★ ஏ. கே கோல்சர் | — 14 |
| ★ ஜே. ஆர் கைக்குண்டு | — 15 |
| ★ கிட்பாக் | — 04 |
| ★ ஹெல்மெட் | — 11 |
| ★ பெல்ற் | — 02 |
| ★ சப்பாத்து சோடி | — 15 |
| ★ தொப்பி | — 09 |
| ★ 60 எம். எம். எறிகணை | — 34 |
| ★ ரி- 81- மகசீன் | — 08 |
| ★ எஸ் எல். ஆர். மகசீன் | — 03 |
| ★ ரி- 56- மகசீன் | — 52 |
| ★ நடுத்தர ரவைகள் | — 4940 |

# திருமலை. காவலரண்கள் தகர்ப்பு; 6 படை பலி; மூவர் படுகாயம்

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் பாலம்போட்டாறு என்னும் இடத்திலிருந்த சிறிலங்கா இராணுவத்தினரின் இரு காவலரண்களைப் புலிகள் தாக்கி அழித்தனர் இத் தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர் இவர்களின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றுக்காலை. 6 15 மணியளவில் இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. திருமலை மாவட்டம் குரங்குப்பாலம் இராணுவமுகாமிற்கும் பாலம்போட்டாறு இராணுவ முகாமிறகும் இடையில் இருந்த காவலரண்களே புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு உள்ளாகின பாலம் போட்டாறு இராணுவ முகாமிலிருந்து சுமார் 150யார் தொலைவில் இக் காவலரண்கள் இருந்தன.

புலிகளின் இவ் அதிரடியின் போது ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், பலர் படுகாயமடைந்தனர். இரு காவலரண்களும் புலிகளால் முற்றாக அழிக்கபபட்டன.

## கைப்பற்றிய ஆயுதங்கள்

(திருமலை)

திருமலை மாவட்டம் குரங்குபாஞ்சானில் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது புலிகளால்கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| ★ ஏ கே இலகு இயந்திரத் துப்பாக்கி | — 01 |
| ★ றம் மகசீன் | — 09 |
| ★ லிங்குகள் | — 900 |
| ★ ரி- 56- 2 ரக துப்பாக்கி | — 03 |
| ★ ரி- 56- 1 ரக துப்பாக்கி | — 01 |
| ★ றவைக் கூடுகள் | — 16 |
| ★ ஜே. ஆர். கைக்குண்டுகள் | — 02 |
| ★ நடுத்தர ரவைகள் | — 1400 |
| ★ ஏ. கே. ரவைக் கூடு தாங்கிகள் | — 04 |
| ★ சப்பாத்து சோடி | — 05 |
| ★ ரெயின் கோட் | — 13 |

## மட்டக்களப்பில் மோதல் இரு புலிகள் வீரச்சாவு

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினருடன் கடந்த ஆறாம் திகதி ஏற்பட்ட மோதலில் 2 ஆம் லெப். தமிழ் நேசன் (சுப்பிரமணியம் ரமேஸ் பெரியகல்லாறு, கல்லாறு) வீரவேங்கை சுதாகரன் (அனுசன்) (சங்கரப்பிள்ளை, குணசீலன்-கல்லடி, மட்டக்களப்பு) ஆகிய இரு போராளிகளும் வீரமரணமடைந்துள்ளனர். இவர்க

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஷெல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவததினர் கரையோரப் பகுதிகளை நோக்கி நேற்று ஷெல்த்தாக்குதல்களை மேற்கொண்டனர்.

நேற்று நண்பகல் 12. 45 மணியளவில் மேற்படி பகுதிகளில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் கொட்டடி, கோட்டை, தொலைத்தொடர்பு நிலையம் ஆகிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன இதற்கிடையே இராணுவத்தினர் பரவலான துப்பாகிப் பிரயோகத்தினையும் மேற்கொண்டவாறு இருந்தனர் அத்துடன் காரைநகரில் இருந்தும் சுழிபுரம். பொன்னலை ஆகிய பகுதிகளை நோக்கி எறிகணைத் தாககுதல் நடாத்தப்பட்டது. (22) (க) (பா)

## வரி விளம்பரம்

### எழுதுனர் பரீட்சை

எழுதுனர் போட்டிப் பரீட்சைத் தகுதித்தேர்வுக்கான பொது விவேகப்பயிற்சி வெளிவந்துள்ளது. க. குணராசா எம். ஏ. எல்லா பிரபல புத்தக சாலைகளிலும் கிடைக்கும்.
(3143)

### your watches, Clocks & Radios

Your Watches Clocks & Radios to repair? Contact us immediately we repair with full guarantee all Watch Batteries available Dilka Watch works 284, Stanely Road, Jaffna.
(Opposite old Vihare)
(சி-4970)

### புலமைப் பரிசில் பரீட்சை [ஆண்டு 4]

தற்போது ஆண்டு 4-ல்கல்வி கற்கும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் முன்னோடிப் பரீட்சை (ஆண்டு4 பாடத் திட்டத்திற்குள்) 13. 09. 1992 ஞாயிறு மு. ப 8.00, மு.ப 11.00 மணி நேரங்களில் (தமிழ், கணிதம், ஆங்கிலம்) நடைபெறும். பதிவு செய்யவும் புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(3150)

### தவறிவிட்டது

8.9.92 அன்று பி மரியசீலன் என்பவருடைய தொழில் அடையாள அட்டையும், தேசிய அடையாளஅட்டையும் (இல. 66218296V) தூக்குப் பையுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
(3154)


## தென்னங்கன்றுகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரச செயலகம் யாழ் கமத்தொழில் திணைக்களத்திடம் இருந்து 800 தென்னங் கன்றுகள் கொள்வனவு செய்துள்ளது. இந்த தென்னங் கன்றுகள் யாழ். நல்லூர் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு மட்டும் பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளன.

இரு உதவிஅரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் தலா 400 தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றை கிராமசேவையாளர்கள் ஊடாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்

# தியத்தலாவை எரிமலைக் குழம்பு: உண்மைநிலை அறியமுடியவில்லை

[பண்டாரவளை]

தியத்தலாவையில் கோணகந்தைக்கும் நரிமலைக்கும் இடையில் தோன்றியுள்ள எரிமலை குழம்பு பற்றிய உண்மை நிலைமையினை இன்னமும் கண்டறிய முடியாமல் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு பூகர்ப்பவியல் திணைக்கள அதிகாரிகள் குழு ஒன்று அங்கு சென்று பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றது பேராதனை பல்கலைக்கழக பூகர்ப்பவியல் பேராசிரியர் டபிள்யு பி.விதான கடந்த ஞாயிற்றுக்கிழமை தியத்தலாவை சென்று ஆராய்ச்சிகளை மேற்கொண்டார்.

இந்த மலைக்குன்றில் இருந்து வெளியேறும் புகை ஒருவித நாற்றத்தை ஏற்படுத்தி வருவதாகவும் இப் புகை மனிதனுக்கு தீங்கு விளைவிக்கலாம் எனவும் பேராதனை பல்கலைக்கழக பூகோளபீட பேராசிரியர் எச்சரித்துள்ளார்,

தடை செய்யப்பட்ட பிரதேசமாக அப்பிரதேசம் அறிவிக்கப்பட்டபோதிலும் ஆயிரக்கணக்கான மக்கள் சென்று பார்வையிடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புகை கிளம்பும் இடத்தில் பாரிய குழி ஒன்று தோண்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது இப்பகுதியில் பெறப்பட்ட மண் கொழும்பு இரசாயன பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தற்போது அப்பகுதியில் உஷ்ண நிலை 460 பெரனைட் பாகையாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஓவியக் கண்காட்சியும் கலை விழாவும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் "றெட்பானா"வின் ஆதரவுடன் சிறுவர் இளைஞர் குழுவினருக்கான ஓவியக் கண்காட்சியும் கலை விழாவும் எதிர்வரும் 12-ம் திகதி நடத்தப்படவிருக்கிறது

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியசாலையில் நடைபெறும் இவ்வைபவத்தில் காலை நிகழ்ச்சிக்கு மங்கையர்க்கரசி வித்தியாசாலை அதிபர் திருமதி ச. காங்கேயனும் மாலை நிகழ்ச்சிக்கு உதவி அரச அதிபர் திரு. ஆ மகாலிங்கமும் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வர்.
(42)

## 60 லட். யார் உடுதுணி மோசடி அதிகாரிகள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

ஆடைகள் தயாரிப்பதற்கென சுங்கத்தீர்வையின்றி இறக்குமதி செய்யப்பட்ட விலை உயர்ந்த 60 இலட்சம் யார் உடுதுணிகள் மாயமாக காணாமல் போனது குறித்து சுங்க அதிகாரிகள் விசாரணை செய்து மர்மத்தை கண்டு பிடித்துள்ளனர்.

ஆடைகள் தயாரித்து ஏற்றுமதி செய்வதற்கென 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்குமுன்னர் முப்பது கோடிரூபா பெறுமதியான அறுபது இலட்சம் யார் உடுதுணிகள் சுங்கத் தீர்வையின்றி இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. ஆனால் தைக்கப்பட்டு ஆடைகள் எதுவும் ஏற்றுமதி செய்யப்படவில்லை என சிரேஷ்ட சுங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உடுதுணிகள் வைக்கப்படும் களஞ்சிய சாலையில் இருந்து உள்ளூர் சந்தையில் இத் துணிகள் விற்கப்பட்டுள்ளன இம் மோசடி தொடர்பாக கொழும்பு புறக்கோட்டை இரண்டாம் குறுக்குத் தெரு களஞ்சிய சாலைக்கு விஜயம் செய்தபோதே இம் மோசடி அம்பலம் வெளிப்பட்டதாக அச் சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த மோசடியின் சூத்திரதாரி தற்போது அவுஸ்திரேலியாவுக்கு நழுவிவிட்டார் எனவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## துப்பாக்கியை விற்ற இராணுவ சிப்பாய் கைது

(காலி)

வெலிஓயா கஜபாகு இராணுவ முகாமிலிருந்து ஏ கே. எஸ். அதிகாரி என்ற சிப்பாய் தன் வசம் எடுத்துச் சென்ற துப்பாக்கியை முகாமில் ஒப்படைக்காத காரணத்திற்காக திஸமாறகம பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர்.

இராணுவ முகாமை விட்டு மே 29—இல் ரி—56 ரகத் (துப்பாக்கி இல. 2805926) துப்பாக்கியுடன் வெளியேறிய இந்தச் சிப்பாய் ஆகஸ்ட் 31இல் முகாமுக்குத் திரும்பியுள்ளார் அவர் முகாமுக்குத் திரும்பிய சமயம் அவர் வசம் துப்பாக்கி இருக்கவில்லை. பொலிஸ் விசாரணையின்போது துப்பாக்கியை 50.000 ரூபாவுக்குத் தீவிரவாதிகளின் தலைவர் ஒருவருக்கு விற்றதாக அவர் ஒப்புக்கொண்டார். திஸமாறகம பொலிஸார் தீவிரவாதத் தலைவரைத் தேடி வருகின்றனர்.

## தலவாக்கலை தோட்டத்தில் தொழிலாளர்வேலைநிறுத்தம்

(தலவாக்கலை)

தோட்ட நிர்வாகத்தின் கெடுபிடிகளை ஆட்சேபித்து தலவாக்கலை கிளாஸ்டோ குறூப்பைச் சேர்ந்த 1600 தொழிலாளர்கள் கடந்த 5 ஆம் திகதி முதல் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இவர்கள் பதின்மூன்று கோரிக்கைகளை முன் வைத்துள்ளனர் என்றும், கிளாஸ்டல்குறூப்பைச்சேர்ந்த றிட்ஸ்டைல் டிவிஷன், மேல் டிவிஷன், கீழ் டிவிஷன் ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்களே வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளனர் என்றும் இ. தொ. கா தலவாக்கலை மாநில பிரதிநிதி சுந்தரம் தெரிவித்தார்

## தொழிலாளர்களை குறைக்க புதிய திட்டங்கள் அமுல்

தோட்ட நிர்வாகங்களை பொறுப்பேற்றுள்ள சில தனியார் நிறுவனங்கள் தொழிலாளர்களின் எண்ணிக்கையை குறைத்து அவர்களை வேலையிலிருந்து நீக்குவதற்காக புதிய திட்டங்களை ஏற்படுத்தி அவற்றை நடைமுறைப் படுத்துவற்கான நடவடிக்கையிலும் ஈடுபட்டுவருவதாக நம்பகரமாகத் தெரியவருகின்றது

தலவாக்கலைப் பகுதியில் உள்ள தோட்ட நிர்வாகங்களை பொறுப்பேற்றுள்ள சில கம்பனிகள் இது தொடர்பாக சில அறிவுறுத்தல்களையும் விடுத்துள்ளதாக தெரியவருகிறது

வேலையில் இருந்து தாமாக விலகிக் கொள்ள விரும்பும் தோட்ட சேவையாளருக்கு ஒன்றரை வருட சம்பளத்தை வழங்க தயாராக இருப்பதாகவும் இதன்படி விலகிக் கொள்பவர்கள் இச் சம்பளத்துடன் ஏனைய கொடுப்பனவுகளும் பெற்றுக் கொண்டு விலகலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் தோட்ட சேவையாளர்கள் மத்தியில் மாத்திரம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## புதிய நிவாரண அட்டைகள் விநியோகிக்கப்படும்

(யாழ் பாணம்)

யாழ்ப்பாணம் கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு புதிய நிவாரண அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட குடும்பங்களிடம் இதுவரைஇருந்துவந்த உலர்உணவு அட்டையும், உணவுமுத்திரைகளும் மீளப்பெறப்பட்டு அதற்குப்பதிலாக புதிய நிவாரண அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

இக்குடும்பங்களுக்கு பத்துக்கட்டங்கள் இலவச உணவு பழையஉலர்உணவு அட்டைக்கு வழங்கப்படுமென்று தெரிவிக்கப்படுகிறது

## அகதி முகாம்களில் தொற்று நோய் அபாயம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரியில் தஞ்சம் அடைந்திருக்கும் அகதிகளுக்கு வயிற்றோட்டம் போன்ற தொற்று நோய்கள் பரவும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது

இதனையடுத்து செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுப் பிரதி நிதிகளும், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் பிரதிநிதிகளும் நேற்று இந்த அகதிமுகாமுக்கு விஜயம் செய்தனர்.
(42)

## உதவிப் பணம் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

உடுவில் உதவி அரச அதிபர் பிரிவிற்குட்பட்ட காசநோய் புற்றுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த உதவிப் பணம் இன்று வியாழக்கிழமை காலை ஒன்பது மணிக்கு அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என்றும் வலி - தெற்கு உதவி அரச அதிபர் செல்வி [illegible] தெரி

## கனத்தை மயான கலவரம்; கட்சி எம்.பிக்கள் விசாரணை

(கொழும்பு)

லெப்டினன்ட் ஜெனரல் டென்சில்கொப்பேகடுவமேஜர் ஜெனரல் விஜய விமலரட்ன ஆகியோரின் மரணச்சடங்குகளின் போது கனத்தை மயானத்தில் நடைபெற்ற வன்முறை சம்பவங்கள் தொடர்பாக மேலும் சில சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் விசாரணை செய்யப்படவுள்ளனர் என்று குற்றப்புலனாய்வு பணியகசிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

முன்னதாக சுதந்திரக்கட்சி எம்.பி நிமல் சிறிபாலடி சில்வாவிடம் குற்றப் புலனாய்வுப் பணியக பொலிசார் விசாரணை செய்து வாக்குமூலம் ஒன்றை பெற்றிருந்தனர்


யாழ்.இந்து பழைய மாணவர் சங்கம் வழங்கும்

**அறிவியல் அரங்கு**

(முழுநிலாநாள்)

காலம் - 11-09-1992 வெள்ளி
நேரம் - 3. 0 பிற்பகல்
இடம் - குமாரசுவாமி மண்டபம்

★ "சமகால உலகச்செய்திச் சுருக்கம்"
திரு S. சத்தியசீலன். சிரேஷ்ட விரிவுரையாளர் வரலாற்றுத்துறை

★ "பண்டைய உணவுப் பழக்கங்களும் போஷாக்கும்"
கலாநிதி N. சிவராஜா
சிரேஷ்ட விரிவுரையாளர் சமுதாய மருத்துவத்துறை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
செயலர் (சி,5028)


## நினைவு கூருகின்றோம்..

## 1992 - 09 - 10

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் நாயாறு வீதியில் சிறிலங்கா இராணுவ வண்டித்தொடர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -
**எட்வின்** (இரத்தினசபாபதி திலீபன்-புதுக்குடியிருப்பு, மணலாறு)

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 16 தமிழ்ப் பயணிகள்.

முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1988 ஆம்ஆண்டு மட்டக்களப்பு தாழங்குடாப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-
**மேஜர் சந்திரன்/வள்ளுவன்** (காத்தமுத்து சிவஜெயம் - அமிர்தகழி - மட்டக்களப்பு)
**லெப். சிறீ/டைகர்தேவன்** (தம்பிப்பிள்ளை - செந்தில்நாதன் - புதூர் - மட்டக்களப்பு)

இதே ஆண்டு வீரச்சாவெய்திய -
**குட்டி** (து. கிருபாமூர்த்தி)

**1-ம் வருட** ... **நினைவு**

கப்படும். (3154)

## தென்னங்கன்றுகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரச செயலகம் யாழ் கமத்தொழில் திணைக்களத் திடம் இருந்து 800 தென்னங் கன்றுகள் கொள்வனவு செய் துள்ளது. இந்த தென்னங் கன்றுகள் யாழ். நல்லூர் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு மட்டும் பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளன.

இரு உதவிஅரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் தலா 400 தென் னங்கன்றுகள் வழங்கப்பட் டுள்ளன.

இவற்றை கிராமசேவை யாளர்கள் ஊடாக விநியோ கிப்பதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகிறது. (42)

களிடம் இதுவரைஇருந்துவந்த உலர்உணவு அட்டையும், உண அட்டைக்கு வழங்கப்படு மென்று தெரிவிக்கப்படுகிறது

## அகதி முகாம்களில் தொற்று நோய் அபாயம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரியில் தஞ்சம் அடைந்தி ருக்கும் அகதிகளுக்கு வயிற் றோட்டம் போன்ற தொற்று நோய்கள் பரவும் ஆபத்து ஏற் பட்டிருப்பதாக தெரிவிக்கப்ப டுகிறது

இதனையடுத்து செஞ்சிலு வைச்சங்க சர்வதேசக் குழுப் பிரதி நிதிகளும், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் பிரதிநிதிகளும் நேற்று இந்த அகதிமுகாமுக்கு விஜயம் செய்தனர். (42)

## உதவிப் பணம் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

உடுவில் உதவி அரச அதிபர் பிரிவிற்குட்பட்ட காசநோய் புற்றுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழ ங்கப்படும் மாதாந்த உதவிப் பணம் இன்று வியாழக்கிழமை காலை ஒன்பது மணிக்கு அலுவலகத்தில் வைத்து வழங் கப்படும் என்றும் வலி-தெற்கு உதவி அரச அதிபர் செல்வி தனுஜா தணிகாசலம் தெரி வித்தார்.

## உரும்பராய் இந். கல்லூரியின் இலக்கிய தின விழா

உரும்பராய் இந்துக்கல்லூரி யின் இலக்கியதின விழா நாளை வெள்ளிக்கிழமை (11.09.92) காலை 9.00 மணிக்கு கல்லூரி மண்டபத் தில் ஆரம்பமாகும். இவ் விழா விற்கு வடமானில கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந் தரலிங்கம் பிரதம விருந்தின ராக கலந்து கொண்டு சிறப் பிக்கின்றார். தொழிலதிபர் திரு. க. கனகராசா அவர் களின் ஆசியுரை உட்பட மங் கள விளக்கேற்றலுடன் நிகழ்ச் சிகள் ஆரம்பமாகும்.

அதன் பின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப் பாளர் திரு. சி. இளம்பரிதி அவர்கள் பாரதி, திருவள்ளு வர் உருவப்படங்களை திரை நீக்கம் செய்து மலர் மாலை அணிவிப்பார். தொடர்ந்து பேச்சு, கருத்தரங்கு, கவி யரங்கு, பரிசளிப்பு மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (03)

## யாழ்ப்பாண மாவட்டத்தில் 50,000 தொழிலாளர் பாதிப்பு

### – கடற்றொழிலாளர் சங்கம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இரா ணுவ நடவடிக்கையால் ஐம்ப தினாயிரம் கடற்றொழிலா ளர்கள் பாதிக்கப்பட்டுள்ள தாக கடற்றொழிலாளர் கூட் டுறவுச் சங்கம் நடத்திய கணிப் பீடு ஒன்றில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

தொழிலில்லாத நிலையி னால்இந்த தொழிலாளர்களை நம்பியிருக்கும் குடும்பங்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கி யுள்ளன என்று சங்கம் அச்சம் தெரிவித்துள்ளது.

இதேவேளை வெளி மாவட் டங்களிலிருந்துஇடம்பெயர்ந்த மீனவ குடும்பங்களும் யாழ்ப் பாணத்தில் தஞ்சமடைந்துள் ளனர் இவர்களும் வரு மானம் ஏதுமின்றி பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். (42)

### தோட்டங்கள் தனியார் மயம்

## தொழிலாளர்கள் வேலைதேடி நகரங்களுக்கு அலைச்சல்

(மாத்தளை)

தோட்டங்கள் தனியார் துறையினருக்கு வழங்கப்பட்ட பின் வாரத்தில் ஒரு நாள் மட் டுமே வேலை வழங்கப்படு கிறது. இதனால் தொழிலா ளர்கள் தொழில் தேடி தின மும் நகரங்களில் அலைகின்ற னர் என்று தெரிவிக்கப்படுகி றது.

அத்துடன் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கைநிதி, வரு டாந்த போனஸ் அரசாங்கத் தால் நிர்ணயிக்கப்படும் சம் பளம் ஆகியனவும் வழங்கப்படு வதில்லை என்றும்,

தனியார் துறையினர் தோட்டங்களை பொறுப் பேற்று அவற்றை கூறு போட்டு விற்பனை செய்து விட்டு நகருக்கு வந்து விடுகின் றனர் என்றும், தொழிலாளர் களோ வேலை தேடி நகரில் அலைகின்றனர் என்றும் தெரி விக்கப்படுகிறது.

பகரமாகத் தெரியவருகின்றது

தலவாக்கலைப் பகுதி யில் உள்ள தோட்ட நிர்வாக ங்களை பொறுப்பேற்றுள்ள சில கம்பனிகள் இது தொடர் பாக சில அறிவுறுத்தல்களை யும் விடுத்துள்ளதாக தெரிய கொண்டு விலகலாம் என அறி விக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் தோட்ட சேவையாளர்கள் மத்தியில் மாத்திரம் தற்போது நடை முறைப்படுத்தப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது.

## கனத்தை மயான கலவரம்; கட்சி எம்.பிக்கள் விசாரணை

(கொழும்பு)

லெப்டினன்ட் ஜெனரல் டென்சில்கொப்பேகடுவமேஜர் ஜெனரல் விஜய விமலரட்ன ஆகியோரின் மரணச்சடங்கு களின் போது கனத்தை மயா னத்தில் நடைபெற்ற வன் முறை சம்பவங்கள் தொடர் பாக மேலும் சில சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் விசாரணை செய்யப்படவுள் ளனர் என்று குற்றப்புலனா ய்வு பணியகசிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

முன்னதாக சுதந்திரக்கட்சி எம்.பி. நிமல் சிறிபால டி சில் வாவிடம் குற்றப் புலனாய்வுப் பணியக பொலிசார் விசார ணை செய்து வாக்குமூலம் ஒன் றை பெற்றிருந்தனர்

## 1-ம் வருட நினைவஞ்சலி — நினைவு கூருகின்றோம்



**லெப். தர்மன் (ரவி)**

(இராசதுரை ரவீந்திரகுமார்)



**வீரவேங்கை மகான்**

(இராசதுரை சுதாகரன்)

5-11-1971 < வீரப்பிறப்பு > 31-05-1973

23-08-1991 < வீரச்சாவு > 25-10-1990

திதி: 10-09-1992

கடந்து விட்டன ஓராண்டு ஆனாலும் புன்னகையுடன்
நீ விடை பெற்றது இன்று போல் உள்ளது தர்மனே
விடை பெறும் போது இன்று தான் இறுதி - என்று
எமக்கும் தெரியவில்லை உனக்கும் புரியவில்லை.
மறவர் படையாம் புலிப்படையில் தம்பி சுதா
இணைந்து மகானானான் செங்களம் பல கண்டான்
கடைசியில் மாவிட்டபுரம் தன்னில் மாவீரன் ஆனான்
ரவி தம்பி பாதையில் நீ தர்மனானாய்
பகைவர் கோட்டையாம் ஆனையிறவு தன்னை
மகிழ்வுடன் அழித்திட சென்ற நீ
வெற்றிப் புன்னகையுடன் வருவாய் என காத்திருக்க
விடுதலைப் பயிருக்கு உரமாகிப் போனாய்
மாவீரர் துயில் இல்லத்தில் துயிலும் எம் வேங்கைகளே
எழுந்திடுவீர் மீண்டும் புதுப் புலியாக
கண்டிடுவீர் சுதந்திர தமிழீழம் தன்னை. (சி-5017)

மகான் வீதி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

என்றும் உங்கள் வரவை எதிர்பார்த்திருக்கும்
பெற்றோர், சகோதரிகள், சகோதரன்,
நண்பர்கள், உறவினர்கள்.

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் நாயாறு வீதியில் சிறிலங்கா இராணுவ வண்டித்தொடர் மீது மேற்கொள் ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -
**எட்வின்** (இரத்தினசபாபதி திலீபன்-புதுக்குடியிருப்பு, மணலாறு)

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட் டுக் கொல்லப்பட்ட 16 தமிழ்ப் பயணிகள்.

முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1988 ஆம்ஆண்டு மட்டக்களப்பு தாழங்குடாப் பகு தியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப் பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-
**மேஜர் சந்திரன்/வள்ளுவன்** (காத்தமுத்து சிவ ஜெயம் - அமிர்தகழி - மட்டக்களப்பு)
**லெப். சிறீ/டைகர்தேவன்** (தம்பிப்பிள்ளை - செந்தில்நாதன் - புதூர் - மட்டக்களப்பு)

இதே ஆண்டு வீரச்சாவெய்திய -
**குட்டி** (து. கிருபாமூர்த்தி)

1990 ஆம் ஆண்டு யாழ். கோட்டைப்பகுதியில் சிறி லங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய
**ஜனாத்**

இதேபகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் வீரச்சாவெய்திய -
**ரவாஸ்** (யோகரட்ணம் புனிதராசா - பலாலி தெற்கு, வசாவிளான் - யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஏறாவூர் ஐயங்கேணியைச்சேர்ந்த மாணவனாகிய தமிழிளைஞன - வாழைச்சேனை இடம் பெயர்ந்தோர் முகாமில் கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1991 ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணு வத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -
**விவேகன்** (சீனி அரசரட்ணம் - 67, என் சி குவாட் டஸ், எல்லை வீதி, மட்டக்களப்பு)
**கப்டன் கார்த்திக்** (சிவஞானம் சிவகுமார் - வன்னி விளாங்குளம், மாங்குளம் - முல்லைத்தீவு)
**2-ம் லெப. சிவராமன்/நாச்சியப்பன்** (பரராஜ சிங்கம் சந்திரசேகரன் - செட்டிகுளம், வவுனியா)
**ஜெகதீஸ்** (பெருமாள் தங்கராசா - அப்பளத்தொழில கத்தடி, ஊற்றுக்குளம், கிளிநொச்சி)

முன்னாள் வடமராட்சி பிரதிப் பொறுப்பாளரும் வட மராட்சித் தாக்குதற் படைப்பிரிவுத் தளபதியுமான -
**மேஜர் மேகன்** (ஜெகநாதன் நிர்மலநாதன் - உடுப் பிட்டி வீதி, தொண்டமனாறு, யாழ்ப்பாணம்)
**2-ம் லெப். ஜான்** (திருநாவுக்கரசு சாந்தகுமார் - மயிலியதனை, தொண்டமனாறு, யாழ்ப்பாணம்)
**வாசு** (இராசசிங்கம் ஜெராட்ஞானரஞ்சித் -கரவெட்டி மேற்கு, நெல்லியடி, யாழ்ப்பாணம்)
**வாகீசன்** (செல்லையா தயாளன் - கரணவாய்தெற்கு, கரவெட்டி, யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - மண்டைதீவில் சிறிலங்கா இராணு வத்தினர் நிலைகொண்டிருந்து சென்ற பகுதியில் இரு கிணறுகளிலிருந்து இதேதினத்தில் எலும்புக் கூடுகளாக மீட்கப்பட்ட 8 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி/5027)

நல்லூர் ... நூலகம்
மாநகர ... றம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

சட்டத்தின் வடிவமல்ல, சட்டத்தின் அடிநாத உணர்வுதான் நீதியை உயிர்வாழச் செய்கிறது
- ஏர்ல்வாரன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 10-09-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## சுவர்க்கத்திலிருந்து நரகத்திற்கு

தென்னிலங்கைச் சிறைச்சாலைகள் நிரம்பி வழிகின்றன. சிறைச்சாலைகளை தற்பொழுது நிரப்பிக் கொண்டிருப்பவர்கள் பெரும்பாலானோர் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டவர்களே யாகும். போதை வஸ்துப்பாவனை. கொள்ளை, கொலை, கற்பழிப்பு போன்ற சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்ட சுமார் 12,398 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந் நிலை தொடருமேயானால் மேலும் பல புதிய சிறைச்சாலைகளைத் திறக்கவேண்டிய நிலை வரும் எனச் சிறைச்சாலை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதை வலியுறுத்துவதுபோல் 'ஹெரோயின் போதைப் பொருள்' பயன் படுத்தும் பழக்கம் பாடசாலை மாணவர்கள் உட்பட இளைஞர்கள் மத்தியில் அதிகரித்து வருவதாக தென்னிலங்கையில் ஆறு மாகாணங்களில் நடத்திய மதிப்பீடு ஒன்று தெரிவிக்கின்றது.

இதேவேளை, 30 000 பிள்ளைகள் துர் நடத்தையில் அதாவது சிறுவர் விபச்சாரத்தில் ஈடுபடுவதாகவும், இவர்களில் பெரும்பாலானோர் 8 வயதிற்கும் 16 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் என்று அண்மையில் பத்திரிகையாளரிடம் பேசிய சட்டத்துறை பேராசிரியர் சாவித்திரி குணசேகரா தெரிவித்தார் ஆனால், இதற்கும் மேலாக விபச்சாரத்தில் ஈடுபடும் பெண்களின் தொகை பலமடங்கு அதிகம் எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

மேலும், கற்பழிப்பு. கொலை, கொள்ளை என்பன நாளாந்தம் அதிகரித்துச் செல்வதாகப் பொலிஸ் அறிக்கைகள் கூறுகின்றன. இவையாவற்றையும் ஒட்டு மொத்தமாக வெளிக்காட்டும் சம்பவமாக கொழும்பில் 'குடுராஜா' என அழைக்கப்படும் போதைப் பொருள் வியாபாரியான சிதம்பரம் தர்மராஜாவின் கொலையும், பின்னர், அவர் மனைவி, சந்திரிகா நீதிமன்றக் காவலில் இருந்த போது குத்திக் கொல்லப்பட்ட சம்பவமும் அமைந்துள்ளது.

# வடக்கு - கிழக்கு பிரச்சினையை 4வருடமாகியும் பிரேமா தீர்க்கவில்லை

### - சிறிமா குற்றச்சாட்டு

(கண்டி)

"வடக்கில் நடைபெறும் போரை முடிவுக்குக் கொண்டு வந்து மக்களின் பிரச்சினைகளுக்குத்தீர்வு காண்பதற்கான உறுதி மொழியை ஜனாதிபதி பிரேமதாசா மக்களுக்கு வழங்கியிருந்தார். வடக்கு கிழக்கு இணைப்பை அனுமதிக்கப் போவதில்லை என்றும் அவர் கூறியிருந்தார் நான்கு வருடங்களாகியும் இப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க பிரேமதாசா தவறிவிட்டார்."

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார் கண்டி போகம்பரை மைதானத்தில் இடம்பெற்ற எதிரணியினரின் பிரசாரக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர்உடுகம்பொல நாட்டை விட்டு வெளியேறிச் சென்று விட்டார். அவரால் எவ்வாறு அப்படி செய்ய முடிந்தது. பொலிசார் கூட ஜனாதிபதியுடன் இல்லையென்பதையே இது காட்டுகிறது என்றும் குறிப்பிட்டார்.

எனது அரசியல் கதியை பொதுமக்கள் தான் தீர்மானிக்க வேண்டும். நீதிமன்றங்கள் அல்ல தேர்தலை ஆட்சேபித்து நான் தாக்கல் செய்த மனுவை நீதிமன்றம் நிராகரித்து விட்டது என்பதற்காக நான் அரசியலை விட்டு ஓடிவிடப்போவதில்லை.

மக்கள் தன்னுடன் தான் இருக்கிறார்கள் என்று ஜனாதிபதி பிரேமதாசா கூறுகிறார் என்றால் இராஜினாமாச்செய்யுமாறுநான் விடுக்கும்சவாலை ஏற்று மீண்டும் தேர்தலொன்றில் போட்டியிட்டு என்னை ஏன் அவர் வெற்றி கொள்ளக் கூடாது என்றும் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதிநிதித்துவம் வெறுமனே எட்டு ஆசனங்களாக குறைக்கப்பட்ட தருணத்தில் கூட நான் மக்களை விட்டு ஓடவில்லை தேர்தல் ஆட்சேப மனு மீதான தீர்ப்பு அறிவிக்கபபட்டவுடனே வெடிக்க வைப்பதற்கென பட்டாசுகளை வாங்கி ஐதே.க முதலாளிகள் ஆதரவாளர்கள் மத்தியில் விநியோகித்தனர் கொழும்பிலே ஒரு சில இடங்களில் தான் சில பட்டாசுகள் கொளுத்தப்பட்டன. கண்டியிலோ அல்லது அநுராதபுரத்திலோ அல்லது நாட்டின் வேறு பகுதிகளிலோ பட்டாசுகள் வெடிக்கவில்லை நான் வெற்றி பெற்றிருந்தால் நாடு பூராவுமுள்ள மக்கள் அவ்வாறு பட்டாசுகளை கொளுத்தியிருப்பர்.

நாட்டின் பொருளாதாரம் சீழிந்து கொண்டு செல்கிறது ஒரு சில தொழிலதிபர்களுக்கும் வர்த்தகப் புள்ளிகளுக்கும் பெருமளவு கடன்களை வழங்கியதன் விளைவாக அரச வங்கிகள் வீழ்ச்சிக்குறுவாயில் இருக்கின்றன.

கம்உதாவ போன்ற பிறந்ததின கொண்டாட்டங்கள் மற்றும் கேளிக்கைகளுக்கு கோடிக்கணக்காக பணம் விரயம் செய்யப்படுகின்றது கம்உதாவுக்காக புத்தளையில் பெறுமதிமிக்க மரங்கள்தறிக்கப்பட்டு காடுகள் அழிக்கப்பட்டன. இதன் விளைவாக இன்றுகதிர்காமம் பகுதியில் வரட்சி ஏற்பட்டுள்ளது. மக்கள் கஷ்டப்படுகிறார்கள் மிகிந்தலையில் மரங்கள் தறிக்கப்பட்டுஐ.தே.க. ஆதரவு முதலாளிகளினால் அவை கொழும்புக்கு கொண்டு வரப்படுகின்றன என்றும் சிறிமா தனதுரையில் குறிப்பிட்டார்

# உடுகம் பொலவிற்கு மீண்டும் பிடி ஆணை

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரேமதாச உடுகம்பொலவுக்கு மீண்டும் பிடி ஆணை பிறப்பிக்கப்படுவதை ஒட்டி ஸி. ஐ டி யின் மாளிகாகந்த மேலதிக நீதவான் திரு. காமினி அமரசேகரா முன்னிலையில் மேலும் அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர். அவர்மீது பிடிஆணை பிறப்பிப்பதற்கு முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உடுகம்பொலவின் சரியான விலாசத்தைத்தங்களால் கண்டுபிடிக்க முடியாமல் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

சட்டத்தரணி விஜயதாச லியனாராட்சி கொல்லப்பட்டதை யொட்டி முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உடுகம்பொல மீது பிடிஆணை பிறப்பிப்பதற்கு எடுக்கப்பட்ட சகலமுயற்சிகளும் அவரின் தற்போதைய இருப்பிடத்தை கண்டுபிடிக்க முடியாததால் தோல்வி கண்டுள்ளன என்றும் ஸி. ஐ. டி யைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன்ட் சிசிர மென்டிசுடன் ஆஜரான சிரேஷ்ட அரச வழக்கறிஞர் திரு. பெரேரா கூறினார். மீண்டும் உடுகம்பொலவிற்கு பிடிஆணை அனுப்புவதற்கான மனுவை நீதவான் அனுமதித்து 1993 தை 8ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்

# தொழில் விலகுவோர்சம்பளம் உடன் வழங்க சட்டம்

தொழில் செய்யும் ஒருவர் தனது பதவியிலிருந்து விலகுமிடத்து அல்லது அவர் இறந்து போனால் அன்றைய தினத்திலிருந்து ஒரு மாத காலத்திற்குள் அவரது கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும்.

தொழிலாளர்களின் கொடுப்பனவுகளைக் காலதாமதம் செய்யும் வேலை வழங்குபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க திருத்தச் சட்டமொன்று சிறிலங்கா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டுள்ளது.

கொடுப்பனவுகளை கால தாமதம் செய்யும் வேலை வழங்குனர் ஒருமாதகால தாமதத்திற்கு 10 சதவீதமும் 3 மாதகால தாமதத்திற்கு 17 சத வீதமும் 6 மாதகால தாமதத்திற்கு 20 சதவீதமும் 6மாதத்திற்கும் ஒருவருடகாலத்திற்கும் இடைப்பட்ட காலதாமதத்திற்கு 30 சதவீதமும் அவர்களது அரைமாதச் சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்பட வேண்டும்என தொழில் வழங்குனர்களை வலியுறுத்த இத்திருத்தச்சட்டம் வழி செய்வதாக தெரிவிக்கப் பட்டது.

## அணிசேரா நாடுகளின்

# ஜகார்த்தா உச்சிமாநாட்டில் பாரபட்சமான நடைமுறை:

### - ஈராக் உப ஜனாதிபதி கண்டனம்

[ஜகார்த்தா]

ஜகார்த்தாவில்நடைபெற்ற பத்தாவது அணிசேரா உச்சி மாநாட்டில் ஈராக் தூதுக் குழுவினர் விமானத்தடை உத்தரவு பற்றி பேசவிடாது தடை செய்தமையானது ஒரு சார்பான பாரபட்சமான தவறான நடைமுறையாகும் என ஈராக்கிய உபஜனாதிபதி தாஹாயஸின் ரமடான் உச்சி மாநாட்டின் இறுதிக் கூட்டத்தில் தெரிவித்தார்.

பிரச்சினைகளை விலக்கிய தன் பின்னாலேயே மாநாடு முடிவடைந்திருக்க வேண்டும் இப்பிரச்சினை அணிசேரா இயக்கத்திலுள்ள அனைத்து நாடுகளையும் பாதிக்கக் கூடி அதனை கவனத்திலெடுக்கத் தவறிவிட்டார்கள் என ஈராக் உபஜனாதிபதி நிருபர்களிடம் பேசும் போது தெரிவித்தார்

ஈராக்கிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ஷியா முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு அளிக்க செல்கிறோம் எனக் கூறும் அமெரிக்கா, பிரிட்டன் பிரான்ஸ் ஆகிய நாடுகள் ஈராக்கின் தென்பகுதியில் ஊடுருவிஈராக் விமானங்கள் பறக்கக்கூடாது என தடைவிதிப்பது சட்ட விரோதமானதுடன் இத்தடை புதியதோர் திருப்பத்தையும் உண்டுபண்ணும் எனவும் அவர் தெரிவித்தார்

பாக்தாத்துக்கு உச்சி மாநாடு எத்தகைய ஆதரவையும் அளிக்கக் கூடாதென மைத்துவத்திலுள்ள ஆறு வளைகுடா அரபு நாடுகளும் எகிப்து, சிரியா, ஈரான் ஆகிய நாடுகளும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது இது அமெரிக்காவின் தூண்டுதலின் பேரிலேயே நடைபெற்றதாக ஈராக் உப ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இதேநேரம் மேற்கு நாடுகள் ஈராக்கைத் துண்டாட வந்திருப்பது பற்றிக் கூறி தேசிய உணர்ச்சிகளை தூண்டிவிடும் முகமாக சதுப்பு நிலப்பகுதியை உள்ளடக்கிய தென்பகுதிக்கு விஜயம் செய்த ஈராக் அமைச்சர்களும்,சதாம் ஹுசெய்னும் அப்பகுதியிலுள்ள மக்களின் ஆதரவை பெறுவதில் ஈடுபட்டுள்ளனர் எனவும் தெரி

# போராடி அழிந்தாலும் சரணாகதிக்கு இடமில்லை

### - ஈராக் அறிவிப்பு

(பாக்தாத்)

ஈராக் போராடி அழிந்தாலும் காலனி ஆட்சிக்கு இடமளிக்காதென ஈராக் செய்தி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மறுமலர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் சக்தி படைத்துள்ள ஈராக்கிய மக்கள் சரணாகதி பற்றி சிந்திக்கவே மாட்டார்களென்ற கருத்தில் அல்மர் சௌமி 'பாபில்' என்ற பத்திரிகைக்கு விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

விமானத்தடை உத்தரவு பற்றிக் குறிப்பிடுகையில் ஈராக் யுத்தம் புரிவதைத்தவிர வேறுவழியில்லை எனஅறிவித்துள்ளார்.

# சர்வதேச கண்காட்சியில் ரஷ்ய ஹெலி அறிமுகம்

[பார்ன்பரோ]

பார்ன்பரோ சர்வதேசவிமானக் கண்காட்சியில் "கா-50 ஹொகும்" எனும் ஹெலிகொப்டரை ரஷ்யா முதல் தடவை அறிமுகப்படுத்தி உள்ளது.

சோவியத்தின் தாக்குதலை எதிர்பார்த்து கடந்த 40 வருடம் விழிப்புடன் இருந்த பிரிட்டிஷ் இராணுவம் விரைவில் 'ரஷ்யஹொகும்' ஹெலியை உபயோகிக்கும் முதலாவது யைஉற்பத்திசெய்யும் கமோவ் பதிலளிக்க உள்ளது.

கா—50ஹொகும்எனப்படும் இந்த ஒற்றை ஆசன தாக்குதல் ஹெலி கொப்டரை விற்க அமெரிக்கா ஐரோப்பிய நாடுகளுடன் கமோவ் நிறுவனம் போட்டியிடும்.

ஏற்கனவே சுதந்திர காமன்வெல்த் நாடுகள் இக்ஹெலிக்கு ஆர்டர் செய்துள்ளன இது பல நவீன தொழில் நுட்ப உத்திகளை கொண்டு

தையில் அதாவது சிறுவர் விபச்சாரத்தில் ஈடுபடுவதாகவும், இவர்களில் பெரும்பாலானோர் 8 வயதிற்கும் 16 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் என்று அண்மையில் பத்திரிகையாளரிடம் பேசிய சட்டத்துறை பேராசிரியர் சாவித்திரி குணசேகரா தெரிவித்தார் ஆனால், இதற்கும் மேலாக விபச்சாரத்தில் ஈடுபடும் பெண்களின் தொகை பலமடங்கு அதிகம் எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

மேலும், கற்பழிப்பு. கொலை, கொள்ளை என்பன நாளாந்தம் அதிகரித்துச் செல்வதாகப் பொலிஸ் அறிக்கைகள் கூறுகின்றன. இவையாவற்றையும் ஒட்டு மொத்தமாக வெளிக்காட்டும் சம்பவமாக கொழும்பில் 'குடுராஜா' என அழைக்கப்படும் போதைப் பொருள் வியாபாரியான சிதம்பரம் தர்மராஜாவின் கொலையும், பின்னர், அவர் மனைவி, சந்திரிகா நீதிமன்றக் காவலில் இருந்த போது குத்திக் கொல்லப்பட்ட சம்பவமும் அமைந்துள்ளது.

அதாவது தென்னிலங்கையில் குற்றச்செயல்களும், ஒழுக்கக் கேடுகளும் அதிகரித்துச் செல்லும் வேகமானது இன்னும் குறுகிய காலத்தில் பாங்கொக் (தாய்லாந்து) மணிலா (பிலிப்பைன்ஸ்) நிலைக்கு கொழும்பையும் உயர்த்தி விடக் கூடும் எனவும், சிலவேளை அவற்றையும் மிஞ்சிவிடும் எனச் சொல்லப்படுகிறது.

அத்தோடு, சமூகத்தில் மட்டுமல்ல அரசியலிலும் வன்முறை பெரும் பங்கு வகிக்கத் தொடங்கியுள்ளது. அரசியல் எதிரிகள் வன்முறை கொண்டு ஆளும் கட்சியினரால் அடக்கப்படுகின்றனர் இதற்கு ஆட்சியில் இருப்பவர்கள் அரச படைகளையும், சட்ட ரீதியற்ற ஆயுதம் தாங்கிய குழுக்களையும் பயன்படுத்தி வருகின்றனர். அதாவது சமூகத்திலும், அரசியல் நடவடிக்கையிலும் ஒழுக்க கேடுகளும், சட்டவிரோத நடவடிக்கைகளும் தீவிரமாக அதிகரித்து வருகின்றன. இவை தென்கிழக்கு ஆசிய நாடுகளின் ஆட்சி முறையையும். (பிலிப்பைன்ஸ் தாய்லாந்து இந்தோனேசியா) ஆட்சியில் இருப்பவர்கள் பின்பற்றும் தந்திரங்களை ஒத்தவையாகவுமே உள்ளன.

இவ்வாறு குற்றச் செயல்களினதும், சமூக விரோதச் செயல்களினதும் மையமாக தென்னிலங்கை மாறி வருவதற்கான பெரும் பொறுப்பை ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கமே ஏற்கவேண்டும் திறந்த பொருளாதாரக் கொள்கை என அறிமுகப்படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கையும், உல்லாசப்பயணத்துறை விரிவாக்கமும், அரசியல் பிரச்சினையான தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கு ஆயுத ரீதியாக தீர்வுகாண முற்பட்டமையும், அரசியல் எதிரிகளை பழிவாங்கும் போக்கும், இந்நிலைமை விருத்தியடைவதற்குக் காரணமாகஇருந்தன. இவற்றிற்குபக்கபலமாக 1978இல் ஐக்கிய தேசியக் கட்சி உருவாக்கிய அரசியல் அமைப்புச்சட்டமும், இனப்பிரச்சினையை அடக்க உருவாக்கப்பட்ட சட்டங்களும், கட்டி எழுப்பப் பட்ட இராணுவமும் உள்ளன.

அதாவது, சிறிலங்காவின் எதிர்காலம் அரசியல், சமூகச் சீர்கேடுகளின் காரணமாக அபாயகரமான ஒரு கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது என்றே கூறலாம். 'சுவர்க்கமென' உல்லாசப் பயணிகளுக்குப் பிரகடனப்படுத்தப்பட்ட சிறிலங்கா பேரினவாத கொள்கையினாலும், அதிகாரப் போட்டியினாலும் நரகமாக மாறிக் கொண்டிருக்கிறது.

## - ஈராக் உப ஜனாதிபதி கண்டனம்

[ஜகார்த்தா]

ஜகார்த்தாவில்நடைபெற்ற பத்தாவது அணிசேரா உச்சி மாநாட்டில் ஈராக் தூதுக்குழுவினர் விமானத்தடை உத்தரவு பற்றி பேசவிடாது தடை செய்தமையானது ஒரு சார்பான பாரபட்சமான தவறான நடைமுறையாகும் என ஈராக்கிய உபஜனாதிபதி தாஹாயஸின் ரமடான் உச்சி மாநாட்டின் இறுதிக் கூட்டத்தில் தெரிவித்தார்.

பிரச்சினைகளை விலக்கிய தன் பின்னாலேயே மாநாடு முடிவடைந்திருக்க வேண்டும் இப்பிரச்சினை அணிசேரா இயக்கத்திலுள்ள அனைத்து நாடுகளையும் பாதிக்கக் கூடியது எனத் தெரிந்திருந்தும் அதனை கவனத்திலெடுக்கத் தவறிவிட்டார்கள் என ஈராக் உபஜனாதிபதி நிருபர்களிடம் பேசும் போது தெரிவித்தார்.

ஈராக்கிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ஷியா முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு அளிக்க செல்கிறோம் எனக் கூறும் அமெரிக்கா, பிரிட்டன் பிரான்ஸ் ஆகிய நாடுகள் ஈராக்கின் தென்பகுதியில் ஊடுருவிஈராக் விமானங்கள் பறக்கக்கூடாது என தடைவிதிப்பது சட்ட விரோதமானதுடன் இத்தடை புதியதோர் திருப்பத்தையும் உண்டுபண்ணும் எனவும் அவர் தெரிவித்தார்

பாக்தாத்துக்கு உச்சி மாநாடு எத்தகைய ஆதரவையும் அளிக்கக் கூடாதென சவுதி அரேபியாவின் தலைமைத்துவத்திலுள்ள ஆறு வளைகுடா அரபு நாடுகளும் எகிப்து, சிரியா, ஈரான் ஆகிய நாடுகளும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது இது அமெரிக்காவின் தூண்டுதலின் பேரிலேயே நடைபெற்றதாக ஈராக் உப ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இதேநேரம் மேற்கு நாடுகள் ஈராக்கைத் துண்டாட வந்திருப்பது பற்றிக் கூறி தேசிய உணர்ச்சிகளை தூண்டிவிடும் முகமாக சதுப்பு நிலப்பகுதியை உள்ளடக்கிய தென்பகுதிக்கு விஜயம் செய்த ஈராக் அமைச்சர்களும், சதாம் ஹுசெய்னும் அப்பகுதியிலுள்ள மக்களின் ஆதரவை பெறுவதில் ஈடுபட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# நிக்கரகுவா பூகம்பத்திற்கு 120 பேர் பலி; பசுபிக் கடலில் சூழல் பாதிப்பு

(மனாகுவா)

நிக்கரகுவாவின் பசுபிக் கரையில் ஏற்பட்ட பூகம்பத்தை அடுத்து கடலில் இருந்து பிரமாண்டமான அளவில் நீர் உட்புகுந்ததினால் மிகப்பெரிய அளவில் சூழல் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

பசுபிக் கடற்கரையில் 50 அடி உயரமான அலைகள் ஒரு கிலோமீற்றர் நிலப்பகுதிக்குள் புகுந்ததால் பல இலட்சக்கணக்கான ஆமைகளும் பறவைகளும்மீனினங்களும் இறந்துள்ளதுடன் பல்லாயிரக்கணக்கான மாங்களும் அழிந்துள்ளதாக சூழல் இயற்கைவள அதிகாரி அவுரா இஸ்குயர்டோ தெரிவித்துள்ளார்.

மனாகுவாவிலிருந்து 80 மைல் தூரத்தில் சமீபத்தில் அமைக்கப்பட்ட மூன்று வனவிலங்கு பாதுகாப்பு பகுதிகளுக்கு மிகப்பெரும்சேதம் ஏற்பட்டுள்ளது.

சூழல் பாதுகாப்புக்கு ஏற்பட்ட நஷ்டம் அளவிட முடியாதது என்றும் இப் பூகம்பத்தில் 120 பேர் மாண்டதுடன் 200பேர் வரை காணவில்லை, கடற்கரை கிராமங்களில் நீர் புகுந்ததால் ஏற்பட்ட இந்த விளைவுகளுடன் பதினாறாயிரம் பேர் வரையில் தமது வீடுகளையும் இழந்துள்ளனர்.

# 1995 மாநாடு எங்கு? தீர்வின்றி மாநாடு முடிவு

(ஜகார்த்தா)

ஜகார்த்தாவில் நடைபெற்ற பத்தாவது உச்சி மாநாடு 1995 இல் எங்கு கூடுமென்ற முடிவெடுக்கப்படாமலேயே கடந்த ஞாயிறன்று முடிவடைந்துள்ளது.

மாநாடு கூடுவதற்கான கட்டடத்தை 100 மில்லியன் செலவில் பிரத்தியேக கம்பனி ஒன்று நிறுவியது இக்கம்பனி அதன் செலவைப் பெறும் அடிப்படையில் 30 வருடங்களுக்கு அதை பாவிக்குமெனத் தெரிகிறது.

குறைந்தது பதினையாயிரம் இராணுவ பொலிஸ் அதிகாரிகள பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டதாகவும் ஆயிரக்கணக்கான பிச்சைக்காரர்கள் அப்பகுதிகளிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு எவ்வித அசம்பாவிதங்களும் இன்றி இவ் உச்சி மாநாடு நிகழ்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

# உலகப்போரை நினைவூட்டும் பொஸ்னியாச் சண்டை

## —பாப்பரசர் கருத்து

(ரோம்)

பொஸ்னியா — சுர்சகோவினாவில் தற்போது நடைபெறும் யுத்தமானது இரண்டாவது உலக மகாயுத்தத்தை நினைக்கப் பண்ணுவதாக உள்ளதாக பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பொஸ்னியா கர்சகோவினா அகதிகளுக்கு மலேசிய அரசாங்கம் தற்காலிகமாக அபயமளித்திருப்பதாக மலேசியப் பிரதமர் மஹதிர் முஹமத் தெரிவித்துள்ளார்.

அந் நாட்டில் சமாதானம் ஏற்படும் வரைக்கும் மலேசியாவில் இருப்பார்கள் எனவும் பிரதமர் நிருபரிடையே பேசும் போது தெரிவித்தார்.

# ஆணைக்குழு நியமனம்

(மின்ஸ்ற்)

சீனாவுடனான பிரதேச பிரச்சினைகளை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்வதற்காக கொமன்வெல்த் சுதந்திர நாடுகள் ஆணைக்குழுவொன்றை அமைத்துள்ளதாக கூறப்படுகிறது.

டெலாரன் தலைநகரான மின்ஸ்ரில் கொமன்வெல்த் சுதந்திரநாடுகளின் கூட்டத்திற்குப் பின்னர் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இந்த ஆணைக்குழு மிகுந்த அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

# சந்திப்பு

ஜகார்த்தா உச்சி மாநாட்டின் போது பாகிஸ்தான் பிரதமர் நவாப்ஷரீப் ஐ. நா. பொதுச் செயலர் பூட்டர்ஸ் காலியைச் சந்தித்து உரையாடினார்.

அவர் பதவியிலிருக்கும் காலத்திலேயே காஷ்மீர் பிரச்சினை தீர்ந்து விடவேண்டுமென எதிர்பார்ப்பதாக பூட்டர்ஸ்காலி தெரிவித்தார்.

மளிக்காதென ஈராக் செய்தி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மறுமலர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் சக்தி படைத்துள்ள ஈராக்கிய மக்கள் சரணாகதி

ரிகைக்கு விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

விமானத்தடை உத்தரவு பற்றிக் குறிப்பிடுகையில் ஈராக் யுத்தம் புரிவதைத்தவிர வேறுவழியில்லை எனஅறிவித்துள்ளார்.

# சர்வதேச கண்காட்சியில் ரஷ்ய ஹெலி அறிமுகம்

[பார்ன்பரோ]

பார்ன்பரோ சர்வதேசவிமானக் கண்காட்சியில் ''கா-50 ஹொகும்'' எனும் ஹெலிகொப்டரை ரஷ்யா முதல் தடவை அறிமுகப்படுத்தி உள்ளது.

சோவியத்தின் தாக்குதலை எதிர்பார்த்து கடந்த 40 வருடம் விழிப்புடன் இருந்த பிரிட்டிஷ் இராணுவம் விரைவில் 'ரஷ்யஹொகும்' ஹெலியை உபயோகிக்கும் முதலாவது மேற்கு நாட்டுப்படையாகவிளங்கக்கூடும் என எதிர்பார்க்கப் படுகிறது.

130 டாங்கி எதிர்ப்பு ஹெலிகொப்டர்களுக்கான பாதுகாப்பு அமைச்சின் கேள்விப் பத்திரத்துடன் இந்த ஹெலியையுற்பத்திசெய்யும் கமோவ் பதிலளிக்க உள்ளது.

கா—50ஹொகும்எனப்படும் இந்த ஒற்றை ஆசன தாக்குதல் ஹெலி கொப்டரை விற்க அமெரிக்கா ஐரோப்பிய நாடுகளுடன் கமோவ் நிறுவனம் போட்டியிடும்.

ஏற்கனவே சுதந்திர காமன்வெல்த் நாடுகள் இக்ஹெலிக்கு ஆர்டர் செய்துள்ளன இது பல நவீன தொழில் நுட்ப உத்திகளை கொண்டிருப்பதுடன் விலையும் மலிவானதாக உள்ளது என வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்துள்ள போதிலும் அரசியல் ரீதியில் இது ஒரு தர்மசங்கடமானது என்றே தெரிவிக்கப் படுகிறது

# 3 வார காபூல் சண்டையில் 2000 பேர் உயிரிழப்பு

(காபூல்)

ஆப்கான் தலைநகரான காபூலில் கடந்த மூன்று வாரச் சண்டையில் 2000 பேர் உயிரிழந்ததாகவும் 9000 பேர் வரையில் காயமடைந்துள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு தகவல் வெளியிட்டுள்ளது

ஐக்கிய நாடுகள் கடந்த வாரம் 1800 க்கும் அதிகமானோர் சண்டையில் பலியானதாக மதிப்பிட்ட போதிலும் இறந்தவர்களில் பலர் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்படவில்லை என ஐ. நா தெரிவித்துள்ளது.

ராக்கெட் தாக்குதலினாலேயே அனேகமானோர் காயமடைந்து இறந்ததாகவும் கடந்த மாதம் காபூலில் நடைபெற்ற சண்டைகள் ஆப்கானிஸ்தானின் 14 வருட கால சிவில் யுத்தத்தின் போது ஏற்பட்ட சண்டைகளை விட உக்கிரமானதாக இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ராக்கெட் தாக்குதல் காரணமாக செஞ்சிலுவைச் சங்கத்தின் மருந்துவகைகள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த நிலையமொன்றும் சிதைவுற்றது 5,00,000 டொலர் பெறுமதியான மருந்துவகைகள் இருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மார்க்கோஸிற்கு எதிராக 10,000 பேர் நஷ்டஈடு

(ஹவாய்)

முன்னாள் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பேர்டினன் மார்கோஸின் சொத்தில் இருந்து 10,000க்கு மேற்பட்டோர் நஷ்டஈடு கோரவுள்ளனர்.

நேற்று புதன்கிழமை ஆரம்பமாகிய சர்வதேச மனித உரிமை நடவடிக்கை வழக்கில் இந்த நஷ்டஈடு கோரிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது.

மார்க்கோஸ் தனது பதவிக் காலத்தில் சித்திரவதை. மரண தண்டனை ஆகியவற்றை மேற்கொண்டதாக கூறும் இவர்கள் 1100கோடி டொலர்களுக்கு மேல் நஷ்ட ஈடு கோரியுள்ளனர்.

பிலிப்பைன்ஸ் 14 ஆண்டு கால இராணுவ ஆட்சியின் போது 7000 க்கும் மேற்பட்டோர் சித்திரை வதை செய்யப்பட்டதாகவும் 2500 பேர் கொல்லப்பட்டதாகவும் மேலும் 750 பேரைக் காணவில்லை என வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

1972 இலிருந்து 1986ஆண்டு பதவியில் இருந்து மார்க்கோஸ் அகற்றப்படும் காலம் வரை இத்தகைய அட்டூழியங்கள் இடம் பெற்றிருப்பதாக கூறப்பட்டுள்ளது.

சித்திரவதை செய்யப்பட்ட ஒவ்வொருவருக்கும் பத்துலட்சம் டொலரும் கொலை செய்யப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு பதினைந்து லட்சம் டொலரும் நஷ்டஈடு கோரப்பட்டுள்ளது.

# ஈழநாதம்

# நிவாரணத்தை வெட்டும் செயல் நியாயமற்ற தொன்றாகும்

## - வெகுஜன ஒன்றியம் ஜனாதிபதிக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

''இராணுவ நடவடிக்கைகள் காரணமாக உடைமைகள். தொழில் ஆகியவற்றை இழந்து சொந்த இடங்களில் இருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரணத்தை அரைவாசியாகக் குறைக்கும் அரசின் செயல் நியாயமற்றதும் மனிதாபிமானமற்றதுமாகும்'' இவ்வாறு அரசின் நிவாரணவெட்டைக் கண்டித்து நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியின் முடிவில் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவரினால் யாழ். அரச அதிபரின் பிரதிநிதியிடம் வழங்கப்பட்ட மகஜரில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மேலும் அம்மகஜரில், போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் நிவாரண உதவியை அரைவாசியாகக் குறைப்பதற்கு அரசு எடுத்த முடிவின் காரணமாக ஒரு பாரிய பயங்கர சூழ்நிலை தோன்றியுள்ளது. இடம் பெயர்ந்த அகதிகள் தொழில் இழந்தவர்கள் ஆகிய பெருந்தொகுதி மக்களை அரசாங்கத்தின் இந்த முடிவு, அவர்களுக்குப் பெருத்த இடர்பாட்டையும் ஏற்படுத்தியுள்ளது. இம்முடிவினால் அவர்கள் பட்டினிக்கும் சாவிற்கும் தள்ளப்படுவார்கள்.

மேலும் அரசாங்கத்தின் இம் முடிவு சம்பந்தமான தமது ஆழ்ந்த கவலையையும் ஏமாற்றத்தையும் உள்நாட்டு வெளிநாட்டு அரச சார்பற்ற உதவு நிறுவனங்கள் கூட தெரிவித்திருப்பதையும் நாங்கள் தங்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம் இந் நிறுவனங்கள் இவ்வகதிகள் மத்தியில் நிவாரணப் பணியில் ஈடுபட்டிருப்பதைக்கருத்தில்கொண்டு அவற்றின் கருத்துக்களை நீங்கள் கவனமாக பரிசீலிப்பீர்களென நம்புகிறோம்.

எனவே தங்களை நாங்கள் வேண்டிக் கொள்வதாவது:-

நீக்கி முன்னைய விநியோகத்திட்டத்தை மீண்டும் அமுல் செய்ய வேண்டும்.

02. மக்களை தமது பழைய இருப்பிடங்களுக்கு மீளச் சென்று வாழக் கூடிய நிலையை உருவாக்க மக்கள் இருப்பிடங்களில் இருந்து இராணுவ முகாம்களை அகற்ற வேண்டும்.

03. இடம் பெயர்ந்த மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, வதிவிடம், சுகாதாரம், கல்வி ஆகியவற்றை தடையும், காலதாமதமும் இன்றியும் வழங்க வேண்டும்.

04. சகல விதமான தடைகளையும் நீக்கி மக்களுக்கு வேண்டியஅத்தியாவசியப் பொருள்களையும் பற்றாக்குறையை ஏற்படுத்தாது வழங்க வேண்டும்.

05. தமிழ் மக்களுக்கெதிரான இந்த கருத்தற்ற போரை பேச்சுவார்த்தை மூலம் ஒரு அரசியல் தீர்வு காண வழிகளை திறக்க வேண்டும் என்பதேயாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பிலுள்ள வெளிநாட்டு தூதுவராலயங்களுக்கு மகஜர் அனுப்பப்படும்

(யாழ்ப்பாணம்)

அகதிகளுக்கான நிவாரணத்தை அரைவாசியாகக் குறைக்கும் சிறிலங்கா அரசின் நிவாரண வெட்டைக் கண்டிக்கும் மகஜர்கள் இலங்கையில் உள்ள அனைத்து வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட உள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம்மேற்கொண்டு வருகிறது அத்துடன் சில சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்களிற்கும் அனுப்பி வைக்கப்பட இருப்பதாகவும் கூறப்படுகிறது. (க) (பா)

## அரசாங்கத்தின்

ந்து பேசும்போது மரத்திலிருந்து வீழுந்தவனை மாடு ஏறி மிதிப்பது போன்று இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணத்தை அரசு அரைவாசியாகக் குறைத்தமை குறித்து எமது கண்டனத்தை ஏற்கனவே நாம் அரசுக்கு தெரியப்படுத்தியுள்ளோம். அதேபோல் இம் மகஜரையும் இன்றைக்கேஉரிய இடத்துக்கு அனுப்பிவைப்பதற்கு நடவ

## 51 தொண்டர் ஆசிரியர் நியமனம்

(கொழும்பு)

தொண்டர் ஆசிரியர்களாக மட்டக்களப்பில் கடமையாற்றிய மேலும் 51 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாத ஆரம்பத்தில் இருந்து இவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏற்கனவே இம்மாவட்டத்தில் 421 தொண்டர் ஆசிரியருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சாம்பசிவம் தெரிவித்துள்ளார்.

## ஆவேசம்

கையில் அகப்பட்ட கற்கள், தடி, பொல்லுகளைக் கொண்டு செயலக கட்டிடத்தை தாக்கினர். இத் தாக்குதலைத் தடுப்பதற்கு இவர் எடுத்த முயற்சிகள்

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் பத்து மணிக்குப் பேரவைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமூகம் தருமாறு வேண்டப்படுவதோடு, நியமனம் பெற்ற பின்பும் பதவிப் பொறுப்பை ஏற்காத பட்டதாரிப் பயிலுனர்களையும் இக் கூட்டத்திற்கு சமூகம் அளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

## நாளை தேர்த்திருவிழா

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் இன்று சப்பறத் திருவிழாவும், நாளை வெள்ளிக்கிழமை காலையில் தேர்த்திருவிழாவும் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது அதையடுத்து சனிக்கிழமை காலை ஏழு மணியளவில் தீர்த்த உச்சவமும் மாலையில் மௌனத் திருவிழாவும் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# நிவாரண வெட்டால் மக்கள் பட்டினிச் சாவில் சிக்குவர்

## அரசசார்பற்ற நிறுவனங்கள் பிரேமதாசாவிற்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம் பெயர்ந்து வாழும்குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுவந்த இலவச உணவுப் பங்கீட்டை அரைவாசியாகக் குறைப்பதென்று புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சமூக சேவைகள் அமைச்சு எடுத்துள்ள முடிவினால் மக்கள் பட்டினிச் சாவையும், நோய் நொடியையும் எதிர்நோக்கவேண்டியுள்ளதென்று அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு அனுப்பிய மகஜரில் தெவித்துள்ளது.

பதின்னான்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் சேர்ந்துள்ள மேற்படி இணையம் ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில்:-

இடம் பெயர்ந்து வாழும் ஐந்து பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு வாராந்தம் 315 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்களை அரசு வழங்கி வந்தது அரசின் இந்த உதவியுடன் அரச சார்பற்ற நிறுவனங்கள் இடம் பெயர்ந்தவர்களுக்கு வதிவிடம், சுகாதாரம் ஐந்து வயதுக்குக் குறைந்த சிறார்களுக்குச் சத்துணவு மகப்பேற்றை எதிர்நோக்கும் தாய்மாருக்கு பால் உணவு, சுயதொழில் ஊக்குவிப்பு போன்ற மனித நேய உதவிகள் எமது சமூக சேவை மையங்கள் மூலமாக வழங்கி வருகிறோம் என்றும்,

அகதிகளுக்கான உணவு நிவாரணத்தை அரைவாசியாக வெட்டுவதென்ற அரசின் இந்த முடிவினால் ஏற்படும் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யக்கூடிய பயன்பெருத்தமான நடவடிக்கையை எடுக்க முடியாத நிலைக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளாக்கப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ள நிதிப் பற்றாக்குறையும் நிலைமையை மேன்மேலும் மோசமடையச் செய்யுமென்றும்

மக்கள் இத்துடன் இரண்டாவது தடவையாக அகதிகளாக்கப்பட்டு இடம் பெயர்ந்துள்ளார்கள் உடுத்த உடையுடனும், வெறுங்கையுடனும் முகாம்களில் தங்கியுள்ளனர். உணவு வெட்டை அமுல் படுத்துவதனால் மக்களின துன்பம் மேன்மேலும் அதிகரிக்கும் ஆகவே, இலவச உணவுப் பங்கீட்டை அரைவாசியாகக் குறைக்கும்திட்டத்தை ரத்துச் செய்யுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது

## பட்டதாரி ஆசிரியர்கள் சந்திப்பு

யாழ்ப்பாண மாவட்டத்திலும், வெளிமாவட்டங்களிலும் புதிதாக நியமனம்பெற்ற பட்டதாரிபயிலுனர் ஆசிரியர்கள் அனைவரையும் நாளை காலை வெள்ளிக்கிழமை முற்பகல் பதினொரு மணிக்கு தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் சந்திக்க உள்ளனர். யாழ்ப்பாண கல்வித் திணைக்கள வளாகத்தில் இருக்கும் நல்லூர் சதனா பாடசாலையில நடைபெறும் இச் சந்திப்பில் குறித்த ஆசிரியர்கள் அனைவரையும் தவறாமல் கலந்து கொள்ளும்படி தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

## சிறுவர் உரிமை பட்டயம் பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

சிறுவர்களின் உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கும் சிறுவர் உரிமை பட்டயத்தை புனர்வாழ்வு அமைச்சர் தயாரத்ன பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சமர்ப்பித்தார்,

இப்பட்டயத்தின் முதலாம் ஏற்பாடு சிறுவன் என்றால் 18 வயதுக்கு குறைந்த ஒரு மனித ஜீவன் என்று வர்ணிக்கிறது. இப்பட்டயம் 25 பக்கங்களை கொண்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது,

## மட்டக்களப்பில

ளுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## யெல்சினின் ஜப்பான்பயணம் இறுதி நேரத்தில் ரத்து

(மாஸ்கோ)

ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்சின் தமது ஜப்பானுக்கான சுற்றுப் பயணத்திட்டத்தை இறுதி நேரத்தில் கைவிட்டுள்ளார்.

இதேவேளை மாஸ்கோவுடனான எல்லைப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமானால் தூர கிழக்கில் தமது செல்வாக்கைக் காட்ட வேண்டாம் என்று ஜப்பானுக்கு பகிரங்க எச்சரிக்கை ஒன்றை மாஸ்கோ விடுத்துள்ளது

ஜனாதிபதி பொரிஸ் யெல்சின் உயர்மட்ட உதவியாளர் ஒருவர் இது பற்றி மேலும் கூறுகையில், மாஸ்கோவின் தூர கிழக்கு நலன்களை ஜப்பான் புரிந்து கொள்ளவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஜப்பானியத் தீவுகள் பற்றிய சர்ச்சை தீர்க்கப்படும் வரை ரஷ்யாவுக்கு பாரிய உதவிகளை வழங்க ஜப்பான் மறுத்து வருவது தெரிந்ததே.

## 3-வது டெஸ்ட்டில் இரண்டாம் நாளில்

## 339 ஓட்டங்களுடன் அவு. அணி ஆட்டமிழந்தது

(கொழும்பு)

அவுஸ்திரேலியா கிரிக்கட் அணிககும், இலங்கை அணிக்கும் இடையே மொறட்டுவை டிரோன் பெர்னாண்டோ விளையாட்டரங்கில் நடைபெற்ற டெஸ்ட் போட்டித் தொடரில் இரண்டாவது நாளான நேற்று அவுஸ்திரேலியா சகல விக்கட்டுக்களை முன்னூற்றியேழு ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. அடுத்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து நூற்றி நாற்பத்து மூன்று ஓட்டங்களைப் பெற்றிருந்தது நேற்றைய ஆட்டங்கள் காலநிலை காரணமாக முற்பகல் பதினொரு மணியளவிலேயே

## க. பொ. த. (சாதாரணம்) முன்னோடித் தேர்வு 1992

## புள்ளி வழங்கும் தேர்வாளர்

மேற்படி தேர்வு விடைத்தாள்களை மதிப்பிட்டுப் புள்ளி வழங்கும் தேர்வாளர்களைத் தெரிவு செய்வதற்குத் தகுதிவாய்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன புள்ளி வழங்கும் தேர்வாளருக்குப் பின்வரும் தகைமைகள் அமைந்திருக்க வேண்டும்.

(1) ஒருவர் எப்பாடத்துக்குப் புள்ளிவழங்க விண்ணப்பிக்கிறாரோ, அப்பாடத்தை அவர் கடந்த மூன்று வருடங்களாக க. பொ. த. (சா) வகுப்பு நிலையில் கற்பித்திருக்க வேண்டும்.

(2) க. பொ. த. (சா) தேர்வில் முன்னர் புள்ளி வழங்கிய அனுபவம் இருத்தல் இன்றியமையாதது.

(3) பட்டதாரிகளாயின் 5 ஆண்டுகள், பயிற்றப்பட்டவர்களாயின் 10 ஆண்டுகள், பயிற்றப்படாதவராயின் 15 ஆண்டுகள் கற்பித்தல் அனுபவம் உள்ளவராயிருத்தல் வேண்டும். தமிழ் பாட விடைத்தாள்களை மதிப்பிடுவதற்குப் பண்டிதர்கள் / வித்துவான்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தினைப் பின்பற்றிப் படிவம் ஒன்றினைத் தயாரித்து

முடிவு, அவர்களுக்குப் பெருத்த இடர்பாட்டையும் ஏற்படுத்தியுள்ளது. இம்முடிவினால் அவர்கள் பட்டினிக்கும் சாவிற்கும் தள்ளப்படுவார்கள்.

மேலும் அரசாங்கத்தின் இம் முடிவு சம்பந்தமான தமது ஆழ்ந்த கவலையையும் ஏமாற்றததையும் உள்நாட்டு வெளிநாட்டு அரச சார்பற்ற உதவு நிறுவனங்கள் கூட தெரிவித்திருப்பதையும் நாங்கள் தங்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம் இந் நிறுவனங்கள் இவ்வகதிகள் மத்தியில் நிவாரணப் பணியில் ஈடுபட்டிருப்பதைக்கருத்தில்கொண்டு அவற்றின் கருத்துக்களை நீங்கள் கவனமாக பரிசீலிப்பீர்களௌன நம்புகிறோம்.

எனவே தங்களை நாங்கள் வேண்டிக் கொள்வதாவது:-

01. உலர் உணவு விநியோகத்தைக் குறைக்கும்படி இடப்பட்ட கட்டளையை

அனுப்பிவைக்கப்பட உள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம்மேற்கொண்டு வருகிறது அத்துடன் சில சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்களிற்கும் அனுப்பி வைக்

## அரசாங்கத்தின்

ந்து பேசும்போது மரத்திலிருந்து விழுந்தவனை மாடு ஏறி மிதிப்பது போன்று இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணத்தை அரசு அரைவாசியாகக் குறைத்தமை குறித்து எமது கண்டனத்தை ஏற்கனவே நாம் அரசுக்கு தெரியப்படுத்தியுள்ளோம். அதேபோல் இம் மகஜரையும் இன்றைக்கேஉரிய இடத்துக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதிவழங்கினார். (க, பா)

(கொழும்பு)

தொண்டர் ஆசிரியர்களாக மட்டக்களப்பில் கடமையாற்றிய மேலும் 51 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாத ஆரம்பத்தில் இருந்து இவர்களுக்கு நியமனம் வழங்கப்படடுள்ளதாகவும் ஏற்கனவே இம்மாவட்டத்தில் 421 தொண்டர் ஆசிரியருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ள தாகவும் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சாம்பசிவம் தெரிவித்துள்ளார்.

## ஆவேசம்

கையில் அகப்பட்ட கற்கள், தடி, பொல்லுகளைக் கொண்டு செயலக கட்டிடத்தை தாக்கினர். இத் தாக்குதலைத் தடுப்பதற்கு சிலர் எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வி கண்டது இத்தாக்குதலினால் யாழ் அரச அதிபரின் அலுவலகம் உட்பட செயலக முன் பக்கம் இருந்த யன்னல் கண்ணாடிகள் சுக்குநூறாக நொருங்கின யாழ். செயலகத்தின் பெயர்ப் பலகை உடைக்கப்பட்டு சிதறிக் கிடந்தது பெயர்ப்பலகையை தாங்கியிருந்த கம்பங்கள் பெயர்த்தெறியப்பட்டன. இறுதியில் ''கற்கள் ஏந்திய கரங்களால் ஆயுதம் ஏந்தத் தயங்க மாட்டோம்'' என்ற கோசம் எழுப்பியவண்ணம் மக்கள் கூட்டம் கலைந்து சென்றது. (க),(பா)

னான எல்லைப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமானால் தூர கிழக்கில் தமது செல்வாக்கைக் காட்ட வேண்டாம் என்று ஜப்பானுக்கு பகிரங்க எச்சரிக்கை ஒன்றை மாஸ்கோ என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஜப்பானியத் தீவுகள் பற்றிய சர்ச்சை தீர்க்கப்படும் வரை ரஷ்யாவுக்கு பாரிய உதவிகளை வழங்க ஜப்பான் மறுத்து வருவது தெரிந்ததே.

### 3-வது டெஸ்ட்டில் இரண்டாம் நாளில்

# 339 ஓட்டங்களுடன் அவு. அணி ஆட்டமிழந்தது

(கொழும்பு)

அவுஸ்திரேலியா கிரிக்கட் அணிககும், இலங்கை அணிக்கும் இடையே மொறட்டுவை டிரோன் பெர்னாண்டோ விளையாட்டரங்கில் நடைபெற்ற டெஸ்ட் போட்டித் தொடரில் இரண்டாவது நாளான நேற்று அவுஸ்திரேலியா சகல விக்கட்டுககளையும் இழந்து, முதலாவது இன்னிங்சில் முன்னூற்று தொன்னூற்றியேழு ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. அடுத்து துடுபெடுத்தாடிய இலங்கை அணி நன்கு விககெட்டுக்களை இழந்து நூற்றி நாற்பத்து மூன்று ஓட்டங்களைப் பெற்றிருந்தது நேற்றைய ஆட்டங்கள் கால நிலை காரணமாக முற்பகல் பதினொரு மணியளவிலேயே ஆரமபமாகியது குறிப்பிடத்தக்கதாகும்.

### ராஜீவ் கொலை வழக்கு

# எனக்கு பணம் வரும்வரை விசாரணை நடத்தக் கூடாது

## நீதிமன்றத்தில் முருகன் மனு

(சென்னை)

''வக்கீல் வைத்து வாதாட எனக்கு பணம் வரும் வரை ராஜீவ் கொலை வழக்கு விசாரணையை நடத்தக் கூடாது'' என்று நீதி மன்றில் முருகன் மனு செய்துள்ளார்.

ராஜீவ் கொலை வழக்கில் கைதான முருகன் சார்பில் 5ஆம் திகதி உயர்நீதி மன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. அதிலேயே இவ்வாறு முருகன் தெரிவிததுள்ளார் அந்த மனுவில் மேலும் கூறப்பட்டு இருப்பதாவது.

நான் நிரபராதி எனக்கும் ராஜீவ் கொலைக்கும் தொடர்பு இல்லை நானும் என் மனைவி நளினி, மகள் மீரா ஆகியோர் சிறையில் இருக்கிறோம் என் மீது மரணதண்டனை கிடைக்கும் குற்றச் சாட்டுக்கள் கூறப்பட்டு உள்ளன இந்த நிலையில் இந்த வழக்கில் வாதாட எனக்கு வெளி மாவட்டத்தில் இருந்து வக்கீல்களை வரவளைக்க அனுமதிக்க வேண்டும் எனவும்,

வெளிநாட்டில் இருந்து எனது உறவினர்கள் மற்றும் சகோதரர்கள் அனுப்பும் பணம் எனக்கு கிடைகக உதவ வண்டும் எனவும், அப் பணம் கிடைக்கும் வரை ராஜீவ் கொலை வழக்கை விசாரிககக் கூடாது என உத்தரவிடவேண்டும் எனவும் அவர் நீதிமன்றத்தைக் கேட்டுக் கொண்டுள்ளார்.


முன்னோடித் தேர்வு 1992

# புள்ளி வழங்கும் தேர்வாளர்

மேற்படி தேர்வு விடைத்தாள்களை மதிப்பிட்டுப் புள்ளி வழங்கும் தேர்வாளர்களைத் தெரிவு செய்வதற்குத் தகுதிவய்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வேண்டபபடுகின்றன புள்ளி வழங்கும் தேர்வாளருக்குப் பின்வரும் தகைமைகள அமைந்திருக்க வேண்டும்.

(1) ஒருவர் எப்பாடத்துக்குப் புள்ளிவழங்க விண்ணப்பிக்கிறாரோ, அப்பாடத்தை அவர் கடந்த மூன்று வருடங்களாக க. பொ. த. (சா) வகுப்பு நிலையில் கற்பித்திருக்க வேண்டும்.

(2) க. பொ. த. (சா) தேர்வில் முன்னர் புள்ளி வழங்கிய அனுபவம் இருத்தல் இன்றியமையாதது.

(3) பட்டதாரிகளாயின் 5 ஆண்டுகள், பயிற்றப்பட்டவர்களாயின் 10 ஆண்டுகள், பயிற்றப்படாதவராயின் 15 ஆண்டுகள் கற்பித்தல் அனுபவம் உள்ளவராயிருத்தல் வேண்டும். தமிழ்பாட விடைத்தாள்களை மதிப்டுவதற்குப் பண்டிதர்கள் / வித்துவான்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தினைப் பின்பற்றிப் படிவம் ஒன்றினைத் தயாரித்து, உரிய தகவல்களைத் தந்து, அப்படிவத்தை உங்கள் பாடசாலை அதிபரூடாகப் பின்வரும் முகவரிக்கு 20-9-1992 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்க்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

தெரிவு செய்யப்படும் தேர்வாளர்கள் குழு நிலையில் விடைத்தாள்களை மதிப்பீடு செய்து புள்ளி வழங்கத் தயாராயிருத்தல் வேணடும்.

புள்ளி வழங்குதற்கான கட்டணம் பற்றிய விபரம் புள்ளி வழங்குவோர் கூட்டத்தில் அறிவிக்கப்படும்.

இல. 19, செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

பணிப்பாளர்
மதிப்பீட்டுக்கிளை,

## மாதிரி விண்ணப்பப் படிவம்

1. பெயர்; திரு /திருமதி/செல்வி:
2. பாடசாலையின் பெயர்;
3. புள்ளி வழங்க விண்ணப்பிக்கும் பாடம்:
4. கல்வித் தகைமை:-
5. க. பொ, த. (சா) வகுப்பில் மேற்படி பாடம் விண்ணப்பதாரராற் கற்பிக்கப்படுகிறதென அதிபர் வழங்கும் கூற்று:-
6. முன்னர் புள்ளி வழங்கிய அனுபவம்:-
7. விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யுங் காலத்திலோ, தேர்வு மறுமொழி வருவதற்கு முன்னரோ தேர்வு தொடர்பான காப்புத் தன்மையைப் பேணுவேன் என உறுதி வழங்குகிறேன்.

சி. 5030

.......................
கையொப்பம்


# யாழ். நகரில்

இடம் பெயர்ந்த மக்கள்அனைவரும் யாழ் நகர சத்திரச் சந்தியில் ஒன்று கூடி அங்கிருந்து நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு ஊர்வலமாகச் சென்றனர். வலிகாமத்தின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் அணிதிரண்ட மக்கள் கூட்டம் சொக்குவில் இந்துக்கல்லூரியில் ஒன்று திரண்டது. பின்னர் அங்கிருந்து நல்லூர் கந்தசுவாமி ஆலயததை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர். வடமராட்சி மக்கள் பருத்தித்துறை வீதி வழியாக நல்லூர் ஆலயத்தை வந்தடைந்தனர்.

தென்மராட்சியின் பலபகுதிகளில் இருந்தும் ஒன்றுதிரண்ட மக்கள் செம்மணி ஊடாக நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை வந்தடைந்தனர்.

இவ்வாறு குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் அணி வகுத்து வந்த மக்கள் கூட்டம் நல்லூர் சந்தசுவாமி ஆலய முன்றலில் சங்கமித்தது. பின்னர் அங்கிருந்து காலை 10-00 மணியளவில் பிரதான கண்டனப் பேரணி கோவில் வீதி ஊடாக புறப்பட்டது இப் பேரணி சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தை அடைந்ததும் அங்கு கண்டன மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. தொடர்ந்து ஆஸ்பத்திரி வீதி ஊடாக யாழ். செயலகத்தை நோக்கி பேரணி நகர்ந்தது.

பேரணியில் கலந்து கொண்ட அனைவரும் உணர்ச்சி பூர்வமாக அரசுக்கெதிரான கோசங்களை எழுப்பியவண்ணமும், கோசங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கிய வண்ணமும், அணிவகுத்துச் சென்றனர். கொழுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாமல் கைக் குழந்தைகளை கையில் தாங்கிய தாய்மாரும், கைத்தடியுடன் தள்ளாடிய வயதுடைய வயோதிபர்களும்கூட நேற்றை பேரணியில் கலந்து கொண்டு அரசுக்கெதிராக கோசம் எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

காலை 9-00 மணி முதல் செயலக வாசலில் மறியல் செய்த மக்கள் கூட்டத்துடன் ஆர்ப்பாட்டப் பேரணியும் இணைந்து கொண்டது ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்ட அனைத்து மக்களும் செயலகத்தை வந்தடைய பல மணி நேரம் எடுத்தது. இவ்வாறு செயலகத்தை வந்தடைந்த மக்கள் செயலகத்தின் முன்பாக வியூகம் அமைத்து மறியல் செய்தனர். இவ் ஆர்ப்பாட்டப் பேரணியையும் மறியல் போராட்டத்தையும் தமிழீழத்தின் பல்வேறு மக்கள் அமைப்புக்கள், தொழிற் சங்கங்கள், பொது ஸ்தாபனங்கள் ஆகியவை அனைத்தும் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

தொடர்ந்து நண்பகல் 12-00 மணியளவில் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கான கண்டன மகஜர் அரசாங்க அதிபரின் பிரதிநிதியான மாவட்டப் பிரதி ஆணையாளர் திரு து. வைத்திலிங்கம் அவர்களிடம் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் திரு சூசைப்பிள்ளை சிறில் அவர்கள் வழங்கினார். (க, பா)

## இரு

பெற்றமோதலில் வீரவேங்கை வளவர்கோன் அல்லது திருமன் (கந்தசாமி திருக்கேதீஸ்வரன் - ஈச்சந்திவு ஆலங்கேணி), கப்டன் நந்தன் (வெள்ளைச்சாமி சுரேஸ்குமார் - சீனன்குடா, நாச்சிக்குடா திருக்கோணமலை) ஆகிய இரு போராளிகளும் வீரமரணமடைந்துள்ளனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## ஏழைகள்

குண்டு வாங்கி எம்மீது போடவா எங்கள் நிவாரணத்தை வெட்டுகின்றாய்'', ''உணவைக் குறைக்க நீ போட்ட சட்டம் உன் - உயிருககே உலை வைக்கும் திட்டம்'', ''சிங்கள தேசத்தில் கொண்டாட்டம் எங்கள் நிவாரணத்தில் திண்டாட்டம் ''சிங்கள தேசம் களியாட்டம் போடவா எங்கள் உணவில் சூறையாட்டம்'', '' உணவினைக் குறைத்தாலும்-எங்கள் உணர்வின்னும் வளரும் சிங்கள தேசம் சிதறிவிடும்'', ''சர்வ தேசமே... சிறிலங்கா அரசை இனம்காண்!'' ''அரிசியில் கைவைத்து அகதிகளை வதைக்காதே-''

(க) (பா) (22)


# ஈழநாதம் இதழின் விளம்பரப் பணிமனை

யாழ்ப்பாண நகரின் மத்தியில்

உங்கள் அபிமானத்தைப்பெற்ற ஈழநாதம் மக்கள் தினசரியில் நீங்கள் விளம்பரங்கள் தருவதற்கு வசதியாக எங்கள் பணிமனை 9-9-92 முதல் இயங்கும்

தொடர்புகளுக்கு:-

## தமிழ்த் தாய் புத்தகசாலை

191, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.


# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 09-09-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம் 5569

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:
24-7074, 27-7043, 26-4727, 26-5244, 27-7794. 26-3250
24-7375, 24-6699, 40-6779, 26-6026, 24-4481

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:
41-8292, 24-4505


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.